**இலங்கை அச்சக நிறுவகம் - 2022**

---------------------------------------------------------------

## 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை அச்சக நிறுவகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழானஎனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் அதனுடன் தொடர்புபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவகம் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவகத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு**

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ''திட்டமிட்டு பேணுதல்'' நிறுவகத்திற்கு அவசியமாக உள்ளது.

**1.5.2 சிறிய மற்றும் நடுத்தர முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| உரிய நியமங்களின் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமம் 17 ஆம் பகுதியின் 15B ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்றின் இழிவுப் பெறுமதி (Residual Value) மற்றும் அதன் பயன்தரு ஆயுட் காலம் ஆகக் குறைந்தது ஒவ்வொரு நிதி ஆண்டின் இறுதியின் போதும் மீளாய்வுசெய்ய வேண்டியதுடன், எதிர்பார்க்கப்பட்ட பெறுமதி தவிர மதிப்பீடுகளில் வேறுபாடுகள் காணப்படுமாயின் அந்த வேறுபாடுகள் கணக்கீட்டு மதிப்பீடொன்றின் வேறுபாடாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியத்தின் 10 ஆம் பகுதியின் 16 ஆவது பந்தியின் பிரகாரம் கணக்கீடு செய்ய வேண்டிய போதிலும், முழுமையான பெறுமதி பூச்சியம் ஆன தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்ற ரூபா 1,053,191 கூட்டுப்பெறுமதியான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண விடயங்களின் பயன்தரு ஆயுட் காலம் மீண்டும் பெறுமதி இடப்பட்டு புத்தகங்களுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டில் இந்த பூச்சியப் பெறுமதியுடனான சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்து ஆண்டின் இறுதியின் போது நிதிக் கூற்றுக்களின் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய நியமத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரசாங்க நிறுவனத்தினால் இலங்கை அச்சக நிறுவகத்திற்கு 2018 செப்டம்பர் 18 ஆம் திகதி கையளிக்கப்பட்ட பரப்பளவு ஹெக்டேயர் 0.1012 (40 பேர்ச்) அளவாக காணியின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த காணியின் உரித்து தொடர்பாக பிரச்சினைகள் இதுவரை தீர்த்து வைக்கப்படவில்லை. இது தொடர்பான விரிவான தீர்மானத்திற்கு இலங்கை அரசாங்கத்தின் அச்சக திணைக்களத்துடன், கலந்துரையாட வேண்டியுள்ளது. | உரிய காணியின் பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்தல் வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய பொது முயற்சிகள் திணைக்களத்தின் வழிகாட்டிக் கோவையின் ஐந்தாவது பந்தியின் இணைப்பு 01 | நிறுவகத்தினால் பிரதான செயலாற்றல் குறிகாட்டி அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும், (KPI) அவற்றை மதிப்பீடு செய்து அதில் நிறைவேற்றப்பட்ட அளவு எவ்வளவு என (outcome) பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கை வெகுசன ஊடக அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின் நிழற்பட பிரதி இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட செயலாற்றல் குறிகாட்டிகளுக்குரிய பெறுபேறுகள் (outcome) சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. | இனங்காணப்பட்டுள்ள செயலாற்றல் குறிகாட்டிகளை மதிப்பீடு செய்து சமர்ப்பித்தல் வேண்டும். |
| (ஆ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 40(1) மற்றும் 40(2) ஆம் உப பிரிவுகள் | நிறுவகத்தின் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | உரிய உப பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 41(1) மற்றும் 41(2) ஆம் உப பிரிவுகள் | நிறுவகத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | உரிய உப பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய பொது முயற்சிகள் திணைக்களத்தின் பொது முயற்சிகளுக்கான செயற்பாட்டு கைநூலின் 6.7 ஆம் பந்தி | அரசாங்கத்திற்கு சொந்தமான கூட்டுத்தாபனத்தினால் நிலையான சொத்துக்கள் மற்றும் களஞ்சியத்தின் அடிப்படையில் வருடாந்தம் சொத்துக்கள் மெய்மெய்யாவு மேற்கொள்ள வேண்டிய போதிலும், நிறுவகத்தின் 2022 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த சொத்துக்களின் மெய்மெய்யாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | உரிய வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 1984 இன் 18 ஆம் இலக்க இலங்கை அச்சக நிறுவக சட்டத்தின் 7(1) ஆம் பிரிவு | நிறுவகத்தின் நடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்தல் மற்றும் நிர்வகிப்பதற்காக 09 அங்கத்தவர்களை உடைய ''நிர்வாக சபையொன்று'' நியமிக்கப்படல் வேண்டும். எனினும், உத்தியோகபூர்வமான அங்கத்தவர்களாக குறிப்பிடப்படுகின்ற அங்கத்தவர்கள் நான்கு பேர்கள் (04) தவிர அமைச்சரினால் நியமிக்கப்படுகின்ற அங்கத்தவர்கள் ஐந்து (05) பேர் 2022 திசெம்பர் 31 ஆம் | பதிலளிக்கப்படவில்லை. | உரிய உப பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | திகதி வரையிலும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 10,817,092 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 5,007,595 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 5,809,497 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு குறுங்கால முதலீடுகளில் இருந்து கிடைத்த வட்டி வருமானம் ரூபா 5,411,319 இனால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை அச்சக நிறுவகத்தால் 2022 மே 18 ஆம் திகதி மக்கள் வங்கியில் 22 சதவீத வட்டி விகிதத்தின் கீழ் நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன், 2022 மே 27 ஆம் திகதி ரூபா 80,130,743 தொகையொன்று 12 சதவீத வட்டி வீதத்தில் இலங்கை வங்கியில் நிலையான வைப்பொன்றின் கீழ் முதலீடு செய்யப்பட்டதனால் இலங்கை அச்சக நிறுவகத்திற்கு அண்ணளவாக ரூபா 4,785,891 வட்டி வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு ஐயவினால் குறிப்பிடப்பட்ட இலங்கை வங்கியில் வைப்பச் செய்யப்பட்ட தொகை கணிசமான தொகையான இருந்தமையால் அதிக வட்டியினை பெற்றுக் கொள்வதற்காக இன்னொரு அரச வங்கிக்கு மாற்றுவதற்கு அதற்காக நிர்வாக சபையின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு முடியாமையினால் கருத்து கூறப்படவில்லை. இதற்கு காரணமாக நிர்வாக சபை கூட்டத்தை நடாத்துவதற்குரிய வசதிகள் காணப்படாமையாகும். | முதலீட்டு நலன்களை மதிப்பீட்டுக்கு உட்படுத்தி ஆகக் கூடிய நலன்கள் கிடைக்கின்ற வகையில் முதலீடு செய்தல் தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும். |

### 3.2 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 நவம்பர் 01 ஆம் திகதி முதல் 2023 ஒக்டோபர் 31 ஆம் திகதி வரை 06 வருட காலத்திற்காக 03 சந்தர்ப்பங்களின் போது 60 வயதை பூர்த்தி செய்த அந்த நிறுவனத்தின் ஓய்வூதிய பதிவாளர் அமைச்சரவை | இலங்கை அச்சக நிறுவக சட்டத்தின் 17 மற்றும் 19 ஆம் பந்திகளின் பிரகாரம் நிர்வாக சபைக்கு அதன் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரை உள்ளடக்கிய | குறித்துரைத்த தகைமைகளுடன் உத்தியோகத்தர் ஒருவரை நிரந்தரமாக பதிவாளர் பதவிக்கு |

| | | |
|---|---|---|
| அங்கீகாரம் இன்றி ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டு 05 வருடங்களும் 07 மாத காலத்திற்காக ரூபா 9,125,000 தொகை சம்பளம் மற்றும் படியாக செலுத்தப்பட்டிருந்தது. | பதவியணியினரை நியமிப்பதற்கோ அல்லது நீக்குவதற்கான முழுமையான அதிகாரம் உள்ளது. | நியமிப்பதற்கு கவனம் செலுத்துதல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆம் திகதிய பொது முயற்சிகள் திணைக்களத்தின் வழிகாட்டிக் கோவையின் 6.6 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பபிக்கப்பட வேண்டிய போதிலும், 2023 மார்ச் 13 ஆம் திகதியே நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | கணக்கு தயாரிக்கும் நடவடிக்கைகளில் சில தாமதங்கள் ஏற்பட்டமையினால் சில நாட்கள் தாமதமாக அறிக்கை சமர்ப்பிக்க வேண்டி ஏற்பட்டிருந்தது. | பொது முயற்சிகள் திணைக்களத்தின் வழிகாட்டிக் கோவையில் உரிய ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |